# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 01.08.2023 supeedsam.com supeedsam@gmail.com


# இந்திய தூதுவரை இன்று சந்திக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் சந்தித்து கலந்துரையாட உள்ளார்.

கூட்டமைப்பின் கோரிக்கையின்

02 ஆம் பக்கத்தில்...

## ஏறாவூரில் பாலியல் சேட்டை புரிந்த ஆசிரியருக்கு எதிராக 29 மாணவிகள் உட்பட 40 பேர் சாட்சி!



(கனகராசா சரவணன், ஏறாவூர் நாஸர்)

ஏறாவூர் பிரதேசத்தில் பெண்கள் பாடசாலை ஒன்றில் மாணவிகளை பாலியல் சேட்டை புரிந்த ஆசிரியர் ஒருவருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு விசேட விசாரணைக்கு நேற்று திங்கட்கிழமை (31) ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் அன்வர் சதாத் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது சாட்சியளிக்க 29 மாணவிகள் மற்றும் ஆசிரியைகள் ஆஜராகி மூடிய நீதிமன்றில் சிலர் சாட்சியளித்து குற்றம் சாட்டப்பட ஆசிரியரை அடையாளம் காட்டியதையடுத்து ஏனைய சாட்சிகளை எதிர்வரும் 2 ம் திகதி ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த பிரதேசத்தில் உள்ள பெண்கள் பாடசாலை ஒன்றில் ஆங்கில பாடம் கற்பித்து வந்த

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் ஒரு கறுப்பு ஜூலைக்கு வித்திடும் அரசு

### சாணக்கியன் குற்றச்சாட்டு



மீண்டும் ஒரு கறுப்பு ஜுலைக்கு அரசாங்கம் வித்திடுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

துறைநீலாவணை தமிழரசுக்கட்சியின் வட்டாரக்கிளையின் ஏற்பாட்டில் கறுப்பு ஜீலை தின நிகழ்வு துறைநீலாவணையில் வட்டாரக்கிளையின் தலைவர் த.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

02 ஆம் பக்கத்தில்...

## அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்க வேண்டும்



அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்கு தொடர்பாக தாம் விவாதித்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு, அரசியலமைப்பின் 13வது திருத்தம், மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால்

02 ஆம் பக்கத்தில்...

## மஹிந்த விற்க முடியாத குப்பை

மஹிந்த ராஜபக்ஷ என்பவர் விற்க முடியாத குப்பைக் கூடமாகிவிட்டார். இனியும் இவரை வைத்து அரசியல் செய்ய முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

02 ஆம் பக்கத்தில்...


## பெற்றோல் விலை அதிகரிப்பு

நேற்று (31) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகளை திருத்தியமைக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 348 ரூபாவாகும்.

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையின் அரசியல் அமைப்பையே தீயிட்டு எரிக்கும் நிலை ஏற்படும்!



இலங்கை அரசியல் அமைப்பையே தீயிட்டு எரிக்கும் நிலை ஏற்படலாம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

02 ஆம் பக்கத்தில்...

## வைத்தியசாலைகளுக்குச் செல்வதற்கு மக்களுக்கு அச்சம்

மக்கள் இன்று பொது வைத்தியசாலைகளுக்குச் செல்லவே அச்சப்படுகிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024, ஒகஸ்ட் மாதமளவில்

02 ஆம் பக்கத்தில்...

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான மீண்டும் போராட்டம்

தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்ற வேண்டுமென வலியுறுத்தியும்இ தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தியும் கடந்த மே 03 ஆம் திகதி தொடக்கம் எதிர்ப்புப் போராட்டம் நடாத்தப்பட்டு வருகின்றது.

02 ஆம் பக்கத்தில்...







# கடலரிப்பிற்கு போட்ட கருங்கற்களால் ஆபத்தா?; மக்களே அவதானம்!



( வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்ட பாரிய கடலரிப்பை கட்டுப்படுத்துமுகமாக பாரிய கருங்கற்கள் போடப்பட்டுள்ளன.

குறிப்பாக திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் முன்புறம் உள்ள கடற்கரைப் பகுதியில் இக் கருங்கற்கள் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினால் போடப்பட்டுள்ளன.

இதே வேளை ஆலய வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் கடந்த 30 ஆம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தற்போது திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

ஆகஸ்ட் 16 ஆம் தேதிதீர்த்தோற்சவத்துடன் நிறைவடைகின்றது.

திருவிழாவிற்கு செல்வோர் குழந்தைகளை கடற்கரை பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டாம் என ஆலய நிர்வாகமும் பொலிசாரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக தீர்த்தம் ஆடும் வேளையில் மிகவும் அவதானமாக கவனத்துடன் செயற்படவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மீறினால் ஆபத்தை சந்திக்க வேண்டி நேரிடும் என்று எச்சரிக்கை இடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் சயன்ஸ் எக்ஸ்போ 2023 மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட புனித சிசிலியா பெண்கள் கல்லூரியில் ''சயன்ஸ் எக்ஸ்போ 2023'' மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி கடந்த 28 மற்றும் 29 ஆந் திகதிகளில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி நிதாஞ்சலி தலைமையில் குறித்த மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி கடந்த 2 தினங்கள் பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

பாடசாலை மாணவச்சமூகத்தின் ஆற்றல் மற்றும் திறமைகளை இளம் கண்டுபிடிப்பாளர்களாகவும் படைப்பாளர்களாகவும் அடையாளப்படுத்தும் விதமாக மாணவிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் களமாக இக்கண்காட்சியை நடாத்தியதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

இக்கண்காட்சியில் மாணவிகளின் ஆளுமைகள், விஞ்ஞான செயல்மாதிரிகள், விஞ்ஞானக் காட்சிப் பொருட்கள், நேரடி செயல் விளக்கம், நிழற்பட மாதிரிகள், விஞ்ஞான ரீதியான செயல் விளக்கம், கோள் மண்டலம், மெய் நிகர் நிகழ்ச்சி, முப்பரிமாணக் காட்சி, தனியாள் சுகாதார ஆலோசனைக் கூடம் என்பன மூலம் வெளிப்படுத்தப்பட்டன. இக்கண்காட்சியை பிரதேசத்தின் ஏனைய பாடசாலை மாணவர்களும், பொது மக்களும் பார்வையிட்டனர். இதன்போது, மாணவிகளால் உருவாக்கப்பட்ட தயாரிப்புகளை பார்வையாளர்களுக்கு செயன்முறையில் விளங்கப்படுத்தியதனால் பார்வையாளர்கள் அனுபவங்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததாக தெரிவித்துள்ளனர்.

# வைத்தியசாலைகளுக்குச் செல்வதற்கு மக்களுக்கு

ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் 12 வருடங்களுக்கு நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

2048 இல் நாடு பாரிய முன்னேற்றமடையும் என்று இவர்கள் ஒரு கற்பனைக் கதையைக் கூறுகிறார்கள். தற்போதுள்ள மக்களுக்கு அடுத்த 25 வருடங்களில் நாடு எப்படி இருக்கும் என்பது தேவையில்லை.

நாளை உயிருடன் வாழ்வோமா என்பதுதான் இவர்களின் எதிர்ப்பார்ப்பாகும். லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் 3 அரை வயது குழந்தையொன்று, கிட்னி பாதிப்பினால் சிசிச்சைப் பெற்றுவந்து, மருந்து இல்லாத காரணத்தினால் மூன்று நாட்களுக்கு முன்னர் உயிரிழந்தது.

போரதானை வைத்தியசாலை, ராகம வைத்தியசாலை போன்ற பல வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு மற்றும் மருந்து ஒவ்வாமையால் பலர் உயிரிழந்தார்கள். 35 வீதமான குடும்பங்கள், இரண்டுவேளை உணவினை மட்டும்தான் உட்கொள்கிறார்க்ள என்று ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலர் ஒருவேளை மட்டும்தான் உண்கிறார்கள். உணவினை கட்டுப்படுத்தலாம். ஆனால், நோயாளிகளுக்கு மருந்துகளை கட்டுப்படுத்தி வழங்க முடியுமா?

கடந்த 6 மாதங்களில் மட்டும் 64, தரமற்ற மருந்துகளை அரசாங்கம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி, மீண்டும் அவற்றை திருப்பியெடுத்துள்ளது.

இதனால், மக்கள் இன்று பொது வைத்தியசாலைகளுக்குச் செல்லவே அச்சப்படுகிறார்கள்.

வைத்தியசாலைக்கு சென்றாலே உயிரிழந்துவிடுவோமோ எனும் அச்சம் மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள நிலையில், அடுத்த 25 வருடங்களில் நாடு எப்படி இருக்கும் என்று அரசாங்கம் கதைகளைக் கூறிவருகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் அரசியல் அமைப்பையே

தமிழ் மக்கள் விரும்பும் தீர்வினை நாங்கள் வழங்க முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இலங்கை அரசியல் அமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தத்தை வழங்குவதற்கு நாடாளுமன்றத்தில் உள்ள எவரது அங்கீகாரமும் தேவையில்லை. ஆனால் எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பில் நாடாளுமன்றத்தைக் கேற்க வேண்டுமெ ஒரு பித்தலாட்டத்தை நடத்தி வருகின்றார்.

தமிழ் மக்களிடம் நாம் கூறவிரும்புவது என்னவென்றால் எமது சுதந்திரத்துக்கான பொதுசன வாக்கெடுப்பை கோரும் செயற்பாடானது ஒரு சில கட்சிகள் மாத்திரமே முன்னெடுத்து வருகின்றன. ஆனால் அனைவரும் இது குறித்து பேசுமிடத்து இவ்விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு ஒரு பொதுசனவாக்கெடுப்பை நடத்தி தமிழ் மக்கள் கேட்கும் சுதந்திரத்தைப் பெறமுடியும்.

13 ஆவது திருத்தத்தை சிங்கள இனவாதிகள் எரித்தார்கள். இதே போன்றதொரு நிலை மீண்டும் ஏற்பட்டால் இலங்கையின் அரசியல் அமைப்பையே தீயிட்டு எரித்து விட்டு சர்வதேச சமூகத்தை நோக்கி செல்லுகின்ற நிலை ஏற்படும் . ஆகவே இலங்கை அரசு தொடர்ந்து ஏமாற்றுகின்றது என்றால் அதற்கு ஏமாறுபவர்களும் பொறுப்பாளிகள் ஆகின்றனர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்க வேண்டும்

நடத்தப்பட்ட சர்வகட்சி மாநாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் என்பன இலங்கையில் நல்லிணக்கச் செயன்முறைகளை கையாள்வதற்கும் எளிதாக்குவதற்கும் இன்றியமையாத கூறுகளாகும் என ஜனாதிபதி ரணில் தெளிவாகக் கூறினார்.

இந்தியப் பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி ரணில் இருவருக்கும் இடையே அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போதும் இது தொடர்பாகப் பேசப்பட்டது. அதிகாரப் பகிர்வு என்பது கூட்டாட்சி கட்டமைப்பில் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களின் நிலைப்பாடு. 1956 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் வெளிப்படுத்தப்பட்டன. அரசியலமைப்பின் 13 வது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்பின் ஒரு பகுதியாகும், அது ஒரு தனி இணைப்பு அல்ல. ஜனாதிபதி மற்றும் நாம் அனைவரும் அதை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் உறுதிமொழி எடுத்துள்ளோம். அத்துடன் அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்தும் நாங்கள் விவாதித்தோம் இவ்வாறு சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

# இந்திய தூதுவரை இன்று சந்திக்கிறது

பிரகாரம் இந்த சந்திப்புக்கான உத்தியோகப் பூர்வ அறிவிப்பை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மின்னஞ்சல் ஊடாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பயணத்தை முடித்து நாடு திரும்பியுள்ள நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களுடன் இந்திய தூதுவர் அவசர சந்திப்பை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிரதமர் மோடி வெளியிட்ட கருத்துக்கள், சர்வகட்சிக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் மற்றும் இந்திய பிரதமரை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏற்கனவே விடுத்திருந்த கோரிக்கையை மீளாய்வு செய்தல் உட்பட தமிழ் மக்கள் சமகாலத்தில் எதிர்கொண்டுள்ள பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாக கூட்டமைப்பின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறிய முடிந்தது.

# பெற்றோல் விலை அதிகரிப்பு

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி இதன் புதிய விலை 375 ரூபாவாகும்.

லங்கா ஒயிட் டீசல் விலை இரண்டு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 306 ரூபாவாகும்.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 12 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 258 ரூபா என இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, புதிய 226 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான மீண்டும் போராட்டம்

அதன் தொடர்ச்சியாக நேற்று பிற்பகல் வேளை கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. இந்த போராட்டமானது இன்றுபி.ப 4.00 மணிவரை சட்டவிரோதமான திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்திற்கு அண்மையில் இடம்பெறவுள்ளது. இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், அக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

அத்துடன் இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு வலுச் சேர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மஹிந்த விற்க முடியாத குப்பை

நாடாளுமன்றத்தை கலைத்து உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலுக்கு செல்லுமாறு நான் ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கு சவால் விடுக்கின்றேன்.

நாம் தேர்தல்களுக்கு அஞ்சப் போவதில்லை. நாளை தேர்தல் நடந்தால்கூட நாம் முகம் கொடுக்கத் தயாராகவே உள்ளோம்.

மக்கள் இன்று போராட்டங்களில் ஈடுபடுவதில்லை தான். ஏனெனில், வீதிகளில் இறங்கி போராடுவதற்கு பதிலாக தங்களின் வருமானத்தை உயர்த்தும் வழிகளை பார்க்கலாம் என்றுதான் மக்கள் நினைக்கிறார்கள்.

ஆனால், மக்களிடம் உள்ள கோபம் அப்படியே தான் உள்ளது என்பதை அரசாங்கம் மறந்துவிடக் கூடாது. தற்போது சிலர், ஜனாதிபதித் தேர்தல்தான் அடுத்ததாக வரும் என்று கூறுகிறார்கள்.

கூறும் அவர்களுக்கே தெரியும், பொதுத் தேர்தல் ஒன்று தான் அடுத்து நடைபெறும் என்று. மஹிந்த ராஜபக்ஷ என்பவர் விற்க முடியாத குப்பைக் கூடமாகிவிட்டார்.

இனியும் இவரை வைத்து அரசியல் செய்ய முடியாது. ஜனாதிபதியும் விரைவில் வீழ்ந்துவிடுவார். எனவே, தைரியம் இருந்தால் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முகம் கொடுக்க தயாராகுங்கள்.

ஏனெனில், இப்போது மக்கள் தொடர்பாக கவலைப்படும் ஆளும் தரப்பினர், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாதத் தீர்மானத்தின்போது அவருக்கு ஆதரவாகத்தான் வாக்களிப்பார்கள்.

மக்களை பாதுகாக்க யார் நடவடிக்கை எடுப்பார்கள் என்பது இறுதியில் தெரியவரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் ஒரு கறுப்பு ஜூலைக்கு வித்திடும் அரசு

இதில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ் அதிகாரம் இல்லாத அதிகார பரவலாக்கலில் நாம் எவ்வாறு எமது மக்களுக்கு எதிராக நடக்கும் அநீதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து பாதுகாக்க முடியும் என்று கேள்வியும் எழுப்பியுள்ளார்.

தற்போதைய தலைவர்கள் மக்களை காப்பாற்ற முடியாத நிலையிலேயே செயற்பட்டுக் கொண்டிருப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் குண்டு வெடிப்பு சம்பவமானது அரசியல் இலாபம் ஈட்டும் வகையில் திட்டுமிட்டு செய்யப்பட்ட விடயமாக தற்போது வரையில் பேசப்பட்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார். இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன் ஞா.சிறிநேசன் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் காரைதீவுப் பிரதேசசபை தவிசாளர் கி.ஜெயசிறில் தமிழசுக்கட்சியின் இளைஞர் அணித்தலைவர் உட்பட தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது,

# ஏறாவூரில் பாலியல் சேட்டை புரிந்த ஆசிரியருக்கு எதிராக ....

55 வயதுடைய ஆங்கில ஆசிரியர் ஒருவர் கடந்த 2019 ம் ஒக்டோபர் 19 ம் திகதி 19ம் அங்கு கல்விகற்று வந்த 7 ம் வகுப்பு மாணிகளின் வகுப்பறையில் கற்பிக்க சென்ற நிலையில் மாணவிகள் சிலரிடம் தொடர்ந்து பாலியல் சேட்டை மற்றும் தகாதவார்த்தை பிரயோகம் போன்ற செயற்பாட்டில் ஈடுபட்டுவந்துள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு எதிராக மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் பொலிஸ் பிரிவில் பாதிக்கப்பட்ட மாணவிகள் செய்த முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அவரை கைது அவருக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலின் பின்னர் அவர் நீதிமன்ற பிணையில் வெளி வந்துள்ளார்.

இதனை தொடர்ந்து குறித்த வழக்கு கடந்த 3 வருடங்;களுக்கு மேலாக மேலதிக விசாரணையின்றி இருந்து வந்துள்ள வழக்கை விசேட விசாரணை எடுத்து விசாரணை செய்யுமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் உத்தர விட்டு சாட்சிகள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகுமாறு கட்டளை பிறப்பித்தார்.

குறித்த வழக்கு விசேட விசாரணைக்காக நீதவான் முன்னிலையில் எடுக்கப்பட்டதையடுத்து அங்கு குற்றம்சாட்டப்பட்ட ஆசிரியர், அவருக்கு எதிராக சாட்சியப்பதற்காக 29 மாணவிகள் மற்றும் பாடசாலை ஆசிரியைகள், அப்போது கடமையாற்றிய அதிபர் உட்பட 40 பேர் சாட்சியமளிக்க ஆஜராகினர்.

இதன் போது ஆசிரியர் சார்பாக சட்டத்தரணிகள் ஆஜராகாததையடுத்து சாட்சிகளை சாட்சியமளிக்க ஏற்பாட்டையடுத்து திறந்த நீதிமன்லில் இருந்து வழக்காளிகள் சாட்சிகள் தவிர்ந்த ஏனைய அனைவரையும் வெளியேறுமாறு உத்தரவிட்டு மூடிய நீதிமன்றில் 3 மாணவிகள் ஒருஆசிரியர் உட்பட 4 பேர் சாட்சியமளித்தனர் .



அதில் சாட்சியமளித்த 3 மாணவிகள் தற்போது சாதாரண கா.பொ.தரத்தில் கல்வி கற்று வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்ட ஆசிரியர் அந்த கால பகுதியில் மாணவிகளின்; முதுகில் கையால் அடிப்பது மற்றும் தகாதவார்தை பிரயோகம் கையடக்க தொலை பேசியில் ஆபாசபடங்களை காண்பிப்பது உடலில் தொட்டு பேசி பாலியல்சேட்டை விடுத்துள்ளதாகவும் இது தொடர்பாக வகுப்பாசிரியரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் சாட்சியமளித்ததுடன் குற்றம்சாட்டப்பட்ட ஆசிரியரை அடையாளம் காட்டினர்.

இதனை தொடர்ந்து வகுப்பறை ஆசிரியர் சாட்சியளிக்கும் போது அந்த கால பகுதியில் குறித்த வகுப்பறை ஆசிரியராக கடமையாற்றி வந்துள்ள போது மாணவிகள் ஆங்கில ஆசிரியர் தொடர்ச்சியாக பாலியல் தொந்தரவுசெய்வதாகவும் கையால் முதுகில் அடிப்பதாகவும் வாடி போடி என பேசுவதாகவும் அவரை மாற்றுமாறும் தன்னிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும்.

அதனை தொடாந்து அவர் கையால் அடிக்க கூடாது என பிரம்பு வாங்கி கொடுத்தும் அவர் கையால் அடித்துள்ளதாகவும் இது தொடர்பாக பிரதி அதிபரிடம் முறைப்பாடு செய்த நிலையில் அதிபர் என்னிடம் விசாரித்தபோது நடந்தவைகளை தெரிவித்ததையடுத்து பாடசாலை ஆசிரியர் ஒழுக்க குழுவைச் சேர்ந்த 3 ஆசிரியர்கள் குறித்த வகுப்பறைக்கு வந்து மாணவிகளிடம் விசாரணை செய்து அறிக்கை தயாரித்து சென்றனர் என சாட்சியளித்து அசிரியரை அடையாளம் காட்டினர்.

சாட்சிகள் தெரிவித்த குற்றச்சாட்டு தொடர்பாக குறித்த ஆசிரியரிடம் குறுக்கு விசாரணை செய்தபோது அதற்கு அவர் எதுவித பதிலும் அளிக்காது மௌனமாக இருந்துள்ள நிலையில் ஏனைய சாட்சிகள் எதிர்வரும் 2ம் திகதி சாட்சியமளிக்க நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டு இந்த வழக்கு விசாரணை தொடர்சியாக இடம்பெறும் என அறித்ததையடுத்து மூடிய நீதிமன்றம் கலைந்தது.

# மட்டு மாவட்டத்தில் 29 நாளில் 8 பேரும் 6 மாத்தில் 79 பேர் தற்கொலை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வெல்லாஅவளி, கொக்குவில் ஆகிய இரு பொலிஸ் பிரிவுகளில் 2 முதியவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை (28) தற்கொலை செய்துள்ளதுடன் மாவட்டத்தில் கடந்த 6 மாத காலப்பகுதில் 18 வயதுக்கு உட்பட்ட 4 சிறுவர்கள் உட்பட 79 பேர் தற்கொலை செய்துள்ளதுடன் இந்த யூலை மாதம் 29 இன்றுவரை 8 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் கீழ் உள்ள மண்டூர் பிரதேசத்தில் 81 வயதுடைய பெண் ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துள்ளதுடன் கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடி பிரதேச கடலில் 64 வயதுடைய ஆண் ஒருவர் பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட நிலையில் சடலாமக மீட்கப்பட்டார். இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனவரி தொடக்கம் யூன் 30 வரையிலான மாத 6 மாத காடலப்பகுதில்; 18 வயதுக்கு உட்பட்ட 3 பெண்கள் ஒரு ஆண் உட்பட 4 சிறுவர்களும். 18 வயதுக்கு மேற்பட்ட 61 ஆண்கள் 14 பெண்கள் உட்பட 79 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இதில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் 9 பேரும் மட்டக்களப்பு பொலிஸ் பரிவில் 10 பேரும் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 10 பேரும் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் 13 பேரும் தற்கொலை செய்துள்துடன் இந்த யூலை முதலாம் திகதி தொடக்கம் நேற்று 29 ம் திகதிவரையிலான காலப்பகுதில் 8 பேர் தற்கொலை செய்துள்ளனர்

இதேவேளை கடந்த 2022 ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ம் திகதிவரை 18 வயதுக்கு உட்பட்ட 11 ஆண்கள் 4 பெண்கள் உட்பட 15 சிறுவர்களும் 18 வயதுக்கு மேற்பட்ட 113 ஆண்களும் 20 பெண்கள் உட்பட ஒருவருடத்தில் 133 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.;

எனவே கடந்த 2022ம் ஆண்டின் புள்ளி விபரத்தையும் இந்த ஆண்டு 6 மாத புள்ளி விபரத்தை ஒப்பிடும்போது இந்த ஆண்டு 6 மாதத்தில் 79 பேர்; தற்கொலை அதிகரித்துள்ள மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய புள்ளிவிபரம் காட்டுகின்றது. எனவே அதிகரித்துவரும் தற்கொலை சம்பவங்களை தடுத்து நிறுத்த அனைவரும் ஒன்றினைந்து செயற்படவேண்டும்.

# திருமலையில் திடீர் தீப்பரவல் 30 ஏக்கருக்கும் அதிக நிலப்பரப்பு தீக்கிரை





(ரவ்பீக் பாயிஸ் )

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நான்காம் கட்டை பிரதேசத்தில் ஏற்பட்ட திடீர் தீப்பரவல் காரணமாக சுமார் 30 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு தீக்கிரையானதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 29ம் திகதி நண்பகல் குறித்த பிரதேசத்தில் குடியிருப்புகள் மற்றும் பாடசாலையை அன்மித்த வனப்பகுதியிலேயே திடீரென இவ் தீப்பரவல் பரவியதாகவும் குறித்த வனப்பகுதி ஆண்டாங்குளம் பிரதேசத்தில் இருந்து நான்காம் கட்டை வரை சுமார் 30 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு இவ்வாறு தீக்கிரையானதாக தெரிவிக்கப்படுகின்றது

குறித்த தீப்பரவளை திருகோணமலை மாநகர சபையின் தீயணைப்பு படை மற்றும் இராணுவத்தினருடன் இணைந்து பொது மக்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் குறித்த தீ பரவல் தொடர்பில் திருகோணமலை உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இராவணேசன் தமிழ் வித்தியாலயத்தில் சுற்றுச்சூழல் செயலமர்வு







(அ.அச்சுதன்)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது தற்போது மிக முக்கியமான விடயமாக உள்ளது. அதற்கு அமைவாக திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்த்திட்டத்தின் கீழ் கரித்தாஸ் மிசெரியோவின் நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்டத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் எனும் தொனிப்பொருளில் அண்மையில் திருகோணமலை இராவணேசன் தமிழ் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

சிறுவர்கள், மற்றும் இளையோர்களுக்கான 'தனி நபர் சுகாதாரம்' பற்றிய செயலமர்வு நடைபெற்றது. இந்நிகழ்வு எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி.கலாநிதி.ஆ.போல் றொபின்சன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விரிவுரையாளராக .ச.. ஷியாம் சுந்தரம் ,PHI கு.சரவணபவன் PHI மற்றும் திருமதி உ.பரிமளா PHM கலந்துகொண்டவர்கள். அத்துடன் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மற்றும் எகெட் கரித்தாஸ் உத்தியோகத்தர்களான திரு.எ.அ.பிரான்சிஸ், திரு.ஓ.ரஜித், திரு.A.M.பிரசாத் திரு.A.D.பொனிபஸ் , திரு.M.டினேஷ் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஏறாவூர் காட்டுமாஞ்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் பால்குட பவனி









(ஏறாவூர் நிருபர் நாஸர்)

கிழக்கிலங்கையில் பிரசித்தம் பெற்ற மட்டக்களப்பு - ஏறாவூர் காட்டுமாஞ்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் பால்குட பவனி பக்திபூர்வமாக நடைபெற்றது.

இந்த ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 22 ஆந்திகதி கதவு திறத்தலுடன் ஆரம்பமானது.

தினமும் விசேட பூசைகள் நடாத்தப்பட்டு (1) செவ்வாய்கிழமையன்று தீ மிதிப்புடன் உற்சவம் நிறைவுபெறுமென ஆலயத்தின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

ஏறாவூர் ஸ்ரீ மதுமலர்க்கா வீரபத்திரர் ஆலயத்திலிருந்து ஆரம்பமான பால்குட பவனி ஆலய வீதி , பிரதான வீதி, காளி கோயில் வீதி, பிள்ளையார் கோயில் வீதி மற்றும் ரெயில் நிலைய வீதி ஆகிய பாதை ஊடாக ஏறாவூர் காட்டுமாஞ்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தை அடைந்தது.

பால்குட பவனியில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டு அரோகரா கோஷத்துடன் சென்றதை அவதானிக்க முடிந்ததாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அங்கு அம்மனுக்கு பாலாபிஷேகம் செய்யப்பட்டதுடன் விசேட பூஜையும் நடைபெற்றது.

# துறைநீலாவணை இல் கறுப்பு யூலை தின நிகழ்வு





(எஸ்.சபேசன்)

துறைநீலாவணை தமிழரசுக்கட்சியின் வட்டாரக் கிளையின் ஏற்பாட்டில் கறுப்பு யூலை தின நிகழ்வு இன்று 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை துறைநீலாவணையில் வட்டாரக்கிளையின் தலைவர் த.கணேசமூர்தி அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது யூலைக்கலவரத்தில் உயிர் நீத்தவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அம்பாரைமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன் ஞா.சிறிநேசன் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் காரைதீவுப் பிரதேசசபை தவிசாளர் கி.ஜெயசிறில் தமிழசுக்கட்சியின் இளைஞர் அணித்தலைவர் கி.சேயோன் உட்பட தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்

# மட்டக்களப்பில் கிழக்கு மாகாண அரச குடிசார் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வருடாந்த போதுக் கூட்டம்







கிழக்கு மாகாண அரச குடிசார் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமானது மட்டக்களப்பு, கல்லடியில் அமைந்துள்ள தனியார் விடுதியோன்றில் பிரம்மாண்டமான முறையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

அச் சங்கத்தின் தலைவர் எஸ்.வரதராஜன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அனுசரணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான மேற்படி கிழக்கு மாகாண அரச குடிசார் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமானது வரவேற்புரை, தலைமையுரை என்பன நிகழ்த்தப்பட்டதுடன் சங்க உறுப்பினர்களின் சத்திய பிரமாண நிகழ்வும் இடம்பெற்றது. அதனை தொடர்ந்து கடந்த பொதுக்கூட்டத்தின் கூட்ட குறிப்புகள், நிதிக் கூற்றுக்கள் என்பன முறையே சங்கத்தின் பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்டு, பொதுச்சபை உறுப்பினர்களின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இப்பொதுக் கூட்டத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கி வரும் நிர்வாக ரீதியான அழுத்தங்கள், பதவியுயர்வு தாமதங்கள், இடமாற்றங்கள் தொடர்பான பிரச்சனைகள் என பல்வேறு விடயங்கள் உறுப்பினர்களினால் சுட்டிக்காட்டப்பட்டு, பரிசீலிக்கப்பட்டதுடன், அது தொடர்பில் விடய அமைச்சுக்களின் ஊடாக தீர்வுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன். ஏனைய தொழில்சார் நாடளாவிய சேவைகள் போன்று தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சேவையினையும் அங்கீகரிக்க வேண்டும் என்றும் அதற்கான அழுத்தங்களை ஏனைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கங்களின் துணையுடன் முன்னெடுப்பது என்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் தொழில் தகைமையை விருத்தி செய்தல், வேதன அதிகரிப்புக்கான ஏற்பாடுகளை ஆராய்தல் என பல்வேறு தீர்மானங்களும் இங்கு எட்டப்பட்டன.

அத்துடன், மேற்படி நிகழ்வின் அனுசரணையாளர்கள் அனைவரும் கிழக்கு மாகாண அரச குடிசார் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தினரால் நினைவு சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# யூலைக் கலவரத்தினால் தமிழர்களின் கல்வி மற்றும் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டது



(எஸ்.சபேசன்)

சுதந்திரத்திற்கு முன்னர் தமிழர்கள் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மேலோங்கி இருந்தபோது அதனைச் சீரளிப்பதற்காகவே பேரினவாதச் சக்திகள் திட்டமிட்டு யூலைக் கலவரத்தினை ஏற்படுத்திய செயலாகவே பார்க்கவேண்டியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

துறைநீலாவணை தமிழரசுக்கட்சியின் வட்டாரக் கிளையின் ஏற்பாட்டில் கறுப்பு யூலை தின நிகழ்வு 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை துறைநீலாவணையில் வட்டாரக்கிளையின் தலைவர் த.கணேசமூர்தி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது யூலைக்கலவரத்தில் உயிர் நீத்தவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன் ஞா.சிறிநேசன் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் காரைதீவுப் பிரதேசசபை தவிசாளர் கி.ஜெயசிறில் தமிழசுக்கட்சியின் இளைஞர் அணித்தலைவர் கி.சேயோன் உட்பட தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்

40 வருடங்கள் கடந்தாலும் இந்த யூலைக்கலவரம் தொடர்பாக எமது இளைஞர்கள் அறிந்திருக்வில்லை இதனை அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டிய தேவை எமக்கு உண்டு தமிழர்களின் உரிமைப்போராட்த்திற்கு வித்திட்ட இடம் துறைநீலாவணையாகும் இக்கிராமத்தில் இந்நிகழ்வு நடப்பது சாலப் பொருத்தமாகும் தமிழரசுக்கட்சியானது தமிழர்களின் உரிமைக்காகவே குரல்கொடுத்துக்கொண்டிருக்கும் கட்சியாகும் இதனை ஆதாரிக்காவிட்டால் எதிர்காலத்தில் தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவிடும்

தமிழர்கள் எல்லைக்கிராமங்களில் வாழ்ந்த போது திட்டமிட்ட அடக்குமுறைகளினால் அவ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு அவ்விடங்களில் பெரும்பான்மை சிங்களமக்கள் குடியமர்த்தப்பட்டு இன்று அவ்விடங்களில் அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இன்றும் வடகிழக்கில் தொல்பொருள் என்ற போர்வையில் தமிழ்மக்களின் சொந்த நிலங்கள் அரசு கையகப்படுத்தும் வேலைகளைச் செய்துவருகின்றனர் இவ்வாறான அடக்குமுறைகளை எமது எல்லைக்கிராமத்து மக்கள் அனுபவித்து வருகின்றனர்

2009 யுத்தம் நிறைவுபெற்ற பின் தமிழ் மக்கள் சொல்லொன்னாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் அவ்வாறு அடக்குமுறைகளையும் அபகரிப்புக்களையும் செய்யுதுகொண்டிருக்கின்ற பேரினவாதத்தின் செயல்கள் யாவும் சரி என அரசின் கைக்கூலிகளாக இருக்கின்ற தமிழ் அமைச்சர்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர் இவ்வாறான நிலை தொடருமானால் எதிர்காலத்தில் தமிழ்மக்களின் நிலை கேள்விக்குறியாகமாறிவிடும் எனவே தமிழ் மக்களையும் எமது நிலத்தினையும் பாதுகாக்கவேண்டுமாயின் தமிழரசுக்கட்சியினை பலப்படுத்தவேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது என்றார்.

# மத்தியஸ்த சபை அங்கத்தவர்களுக்கான நியமனம்







(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழ் ஏற்படும் பிணக்குகளை கலந்துரையாடல் மூலம் தீர்த்து வைத்து மாற்றுத் தீர்வுப் பொறிமுறையினை பரவலாக்கும் வகையில் நீதி அமைச்சின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள மத்தியஸ்த சபை அங்கத்தவர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். கல்முனை நீதவான் நீதி மன்ற நீதிபதி எம்.எஸ்.சம்சுதீன் கௌரவ அதிதியாகவும், பொத்துவில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயில், சிரேஷ்ட சட்டத்தரணிகளான எஸ்.எம்.ஏ.கபூர், எஸ்.எல்.ஏ.றசீட், ஐ.எல்.ஏ.கபூர், அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான மத்தியஸ்த சபை பயிற்றுவிப்பாளர் எம்.ஐ.எம்.ஆஷாத் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் விஷேட அதிதிகளாகவும் இதன்போது கலந்து கொண்டனர்.

மூன்று வருடங்கள் செயற்படும் வண்ணம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள ஒலுவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஆலம்குளம் மற்றும் சம்புநகர் ஆகிய பகுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மத்தியஸ்த சபை உறுப்பினர்கள், மத்தியஸ்த சபை தவிசாளர் ஐ.எல்.எம்.ஹாசீம் தலைமையிலான 43 பேர் இதன்போது நியமனங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இம்முறை அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபைக்காக துறைசார் முக்கியஸ்தர்கள் அங்கத்தவர்களாக நியமன் பெற்றுள்ளமை சிறப்பம்சமாய் விளங்குகின்றது. குறிப்பாக உள நல உதவியாளர்கள், பெண்கள் சிறுவர்கள் பிரிவில் பணியாற்றும் முன்னிலை உத்தியோகத்தர்கள், மார்க்க அறிஞர்கள், மத நிறுவனங்களின் பரிபாலன சபை உறுப்பினர்கள், பாடசாலைகளின் நேரடித் தொடர்பாளர்கள் என இம்மத்தியஸ்த சபைக் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபைக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் வகையில் நீதி அமைச்சின் மூலம் விண்ணப்பம் கோரப்பட்ட போது இதற்கென, 217 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களுள் 168 பேருக்கு நேர்முகப்பரீட்சை இடம்பெற்றதுடன், இதில் 68 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுள் 43 பேர் எழுத்து மூலப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெற்றனர்.

இவ்வாறு நியமனம் பெற்றவர்களுக்கு விஷேட பயிற்களும், நீதிமன்றம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு நேரடி களப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு துறைசார் அதிகாரிகளால் அறிவுரைகள் ஆலோசனைகள் போன்றன வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமஷ்டியை வலியுறுத்தி திருமலையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்




(அ . அச்சுதன்)

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குமுவின் ஏற்பாட்டில் தமிழ் பேசும் மக்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வான சமஷ்டியை வலியுறுத்தி நேற்று (31) திருகோணமலை நகரசபையை அண்மித்த பகுதியில் அமைதியான முறையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய செயல்முனைவின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு இன்றைய தினம் இந்த ஜனநாயகப் போராட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அரோகரா கோசம் விண்ணைப் பிளக்க சிறப்பாக நடைபெற்ற திருக்கோவில் கொடியேற்றம்

( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக் கொடியேற்ற நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில், சிவஸ்ரீ திருக்குமரக் குருக்கள் தலைமையில்

ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் ஒத்துழைப்பில் கொடியேற்ற உற்சவம் 12.23 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பரிபாலனசபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையிலான பரிபாலன சபையினர், மற்றும் ஆயிரக்கணக்கான கந்தன் அடியார்கள் கலந்து கொண்டனர்.

விசேட பிரமுகர்களாக, கிழக்கு



மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம் , பேராசிரியர் எஸ்.குணபாலன் , சுந்தரலிங்கம் முகுந்தன் (லண்டன்), இந்து ஊடகர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்த உற்சவம் 18 நாட்கள் நடைபெற்று ஆகஸ்ட் மாதம் 16ஆம் தேதி புதன்கிழமை சமுத்திர தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களால் சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு பின்பு இராஜராஜ சோழர் காலத்தில் கற்கோயில் அமைக்க பெற்று நான்கு கால பூஜைகள் செய்யப்பட்டு ஆடி அமாவாசை உற்சவமும் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தினமும் பகலில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப் படவிருக்கிறது.

பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவம் என்பதால் இம்முறை பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதற்காக முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிள் சாகசங்கள் செய்யும் இனந்தெரியாத நபர்கள்

## மக்கள் அச்சநிலை; நடவடிக்கை எடுக்கப்படுமா?

(பாறுக் ஷிஹான்)

தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் வரும் இனந்தெரியாத நபர்கள் பொதுப்போக்குவரத்தை சீர்குலைத்து அச்சுறுத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவு சாய்ந்தமருது பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ளடங்குகின்ற பிரதான வீதிகள் உள்ளக வீதிகளில் இவ்வாறு இனந்தெரியாத நபர்கள் தலைக்கவசம் இன்றி பொதுப் போக்குவரத்தை குழப்பும் வகையில் அதிசக்தி இயந்திரம் கொண்ட மோட்டார் சைக்கிளில் வருகை தந்து அச்சுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறு குறித்த மோட்டார் சைக்கிளில் இருவர் தனியாக வருவதுடன் அதிக சத்தம் கொண்ட ஒலி எழுப்பி வீதிகளின் நடுவே அதிவேகமாக பயணம் செய்து ஏனையோரை அச்சுறுத்தி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு அப்பகுதி பாராளுன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உட்பட சிலர் முறைப்பாடுகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மேலும் இவ்வாறானவர்கள் வீதி போக்குவரத்து சட்டத்தை மதிக்காமல் தொடர்ச்சியாக பாடசாலை நாட்கள் அலுவலக நாட்களிலும் மிக வேகமாக மோட்டார் சைக்கிள்களை செலுத்தி சாகசங்களை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சட்டவிரோதமாக பொதுப்போக்குவரத்தை சீர்குலைத்து உயிர்சேதத்தை ஏற்படுத்தும் செயலில் ஈடுபடும் நபர்களை கைது செய்ய பொலிஸார் உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 09

# யாகவராயினும் மனவடக்கம், நாவடக்கம் காக்க...

*யாராயினும்மனவடக்கம்,*
*நாவடக்கம் காக்க காவாக்கால்வருத்தப்படுவர்*
*சொல் இழுக்குப் பட்டு*

காடு, மேடு, மலை, குகைகளில் வாழ்ந்த மனிதன் காலப் போக்கில் ஆற்றுப் பள்ளத்தாக்குகளை அண்டிய பிரதேசங்களில் நிலையான வாழ்க்கை வாழத் தொடங்கினான். தொடர்பாடலுக்காக ஓசை, ஒலி, சைகை, குறியீடுகள் ஆகிய ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. காலப் போக்கில் ஓசை, ஒலிகளுக்கு சொல் வடிவம் கொடுத்து பேசக் கற்றுக் கொண்டான். அந்தப் பேச்சோசை ஒலிவடிவம் பெற்று மொழியாக வளர்ச்சி அடைந்தது. இவ்வாறு மொழி வளர்ச்சி அடைந்து பிரதேசம், சமூகம், சாதி, இனம், நாடு, சர்வதேசம் என்ற அடிப்படையில் மொழிகளும் ஆயிரக் கணக்கில் வளர்ச்சியடைந்து சென்றன. உலகில் இப்போது 2400 க்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. ஒரு மொழியில் இருந்து பல கிளை மொழிகளும் உருவாகின. உலகில் உள்ள பல மொழிகள் இன்று வரை எழுத்து வடிவம் பெறவில்லை. அதேபோல் பல மொழிகள் வழக்கில் இருந்து மறைந்துவிட்டன. கல்வி, விஞ்ஞான, தொழினுட்ப, கலாசார, நாகரிக மாற்றங்களுக்கு ஏற்ப மொழி வளர்ச்சி அடைந்து கொண்டே வருகிறது. மொழி மூலமான பேச்சொலிக்கு ஆதாரமாக அமைவது நமது நாக்காகும். மொழி விருத்திக்கும் உச்சரிப்புக்கும் நாக்குப் பிரதானமான ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது.

நாக்கு எலும்பில்லாத தசையினாலான சுவை உணரி இதழ்களைக் கொண்ட தொண்டைக் குழியுடன் இணைந்து வாய்க்குள் அமைந்திருக்கும் ஓர் உறுப்பாகும். இறைவனின் படைப்பில் மிக அதிசயமான உறுப்புக்களில் ஒன்றுதான் நாக்காகும். உடம்பில் இருந்து வெளியேறும் காற்றைப் பயன்படுத்திக் கதைக்கப் பேச முடிகிறது. நாக்கு ஒலி, ஓசை, பேச்சொலி ஆகியவற்றுக்கு உதவுகிறது. உமிழ் நீரைச் சுரந்து உணவினைப் பற்களுக்கிடையில் அனுப்பிச் சிறுசிறு துகழ்களாக்கி இலகுவில் சமிபாடடையுயும் வகையில் தொண்டைக்குழி, களம் ஊடாக இரைப்பைக்குள் அனுப்ப உதவுகிறது. உணவு இலகுவில் ஜீரணமாவதற்கு நாவின் ஊடாகச் சுரக்கும் திரவம்(உமிழ்நீர்) மிக முக்கியமானதாகும். உண்ணும் உணவில் அடங்கியுள்ள அறு சுவைகளையும் வேறுபிரித்தி உணர்ந்து மனமகிழ்வைத்தர உதவுகிறது. அத்தோடு உணவினைப் பற்களுக்கு இடையில் அனுப்பும்போது தான் கடிபடாமல் நேர ஒழுங்கின்படி(கூடிட்டிணஞ்) செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்தகைய பல செயற்பாடுகளைச் செய்யும் நாக்கு எந்தளவு முக்கியமானது என்பதனைப் பலர் உணர்ந்து கொள்வதில்லை.

பாடகர், இசை மேதை, இசையமைப்பாளர், பேச்சாளர், கற்பித்தல் தொழிலில் ஈடுபட்டிருப்போர், திரைப்பட, நாடகக் கலைஞர்கள், பிரசங்க வித்தவான், அரசியல்வாதிகள், சமயப் போதகர்கள், பிற கலைஞர்கள், நடத்துனர்கள் ஆகியோருக்கு நாக்கு மிக மிக முக்கியமான ஒன்றாகும். அதேபோல் கருத்துக்களை வெளியிடும்போது சிறந்த பேச்சொலி வெளிப்பாட்டுக்கு நாக்கு மிக அவசியமாகின்றது. நாக்கு இல்லை என்றால் வெறும் ஒலி மாத்திரமே தொண்டைக்குழி உடாக வெளியேறிச் செல்லும். கருத்து வெளிப்பாட்டுக்கு அவசியமான நாக்கு நமது சிந்தனை வெளிப்பாட்டுக்கும் உதவுகிறது. நாம் அறிவைக் கொண்டு சிந்திப்பதை மனம் ஒழுங்குபடுத்துகிறது. சிந்திப்பது யாவும் மனத்தினால் ஒழுங்குபடுத்தப்படாமல் வெளிப்பட்டால் நிலமை விபரீதமாகிவிடும். மனமாற்றத்துக்கேற்ப புத்தி மாறும், புத்தி மற்றத்துக்கேற்ப சித்தம்(மனம்) மாறும். ஒரு மனிதன் சமநிலை ஆளுமையுடன் இருப்பதற்கு இவை இரண்டும் அவசியமாகின்றன. அறிவும்(புத்தி) மனமும் சமநிலையில் இருக்கும் போது உடல் சமநிலை பேணப்படும். அறவும் மனதும் குழம்பும்போது பதட்டம், உளநெருக்கீடு ஏற்படும். அதனால் தவறான வார்த்தைப் பிரயோகங்களும் வெளிப்படும். இது பலருக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தலாம். அதனால் அறிவு, மனம் இரண்டையும் சமநிலையில் பேணுவது சாலப் பொருத்தமானதாகும். அறிவுக்கும் மனதுக்கும் இடையில் குழப்பம் ஏற்படும்போது சலனம், சஞ்சலம், கோபம், பிடிவாதம், வஞ்சகம், சூது, பொறாமை அகிய பல எதிர்மறையான செயற்பாடுகள் வெளிப்படுத்தப்படலாம். அவற்றில் இருந்து விடுபடுவதற்கு உளச் சமநிலை பேணல் அவசியமாகும்.

எமது ஐம்புலன்களுடன் இணைந்த செயறபாடுகள் யாவும் புத்தி, சித்தம் ஆகியவற்தோடு தொடர்புபட்டவை. புத்தி, சித்தம் ஆகியவற்றின் வெளிப்பாடுகள் யாவும் ஐம்புலன்களூடாக வெளிப்படுத்தப்படுகின்றன. அதனால் புத்தி, சித்தம், நாக்கு ஆக்ய மூன்றும் பிரதானமாகக் கொள்ளப்படுகின்றன. அறிவு சிந்திப்பதை மனம் ஒழுங்குபடுத்தி நாவினூக வெளிப்படுத்தப்படுகிறது. புத்தி, சித்தம் ஆகியவற்றின் வெளிப்பாடுதான் நாவின் வெளிப்பாடு. இவை இரண்டையும் விட்டு நாக்குத் தனித்துச் செயற்பட முடியாது. அவற்றினூடாகச் சிந்தித்து ஒழுங்கமைக்கப்படுவதை நாக்கு கருத்துள்ள வகையில் வெளிப்படுத்துகிறது. இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை.

புத்தி, சித்தம், நாக்கு, குரல்வளை, பல், மேலண்ணம், கீழண்ணம், காற்று, ஒலி ஆகியன தொடர்புபட்டு வாய் மூலமாகச் சொல் ஒலியாக வெறியேறுகின்றது.



இவ்வாறு வெளியேறும் செற்கள் நற்சொற்கள், வன்சொற்கள்என வகைப்படுத்தப்படுகின்றன. நற்சொற்கள், தீயசொற்கள் இரண்டுக்கும் காரணமாக அமைவது புத்தியும் சித்தமுமாகும். சிந்தித்து வெளியேற்றப்படும் சொல்லுக்கு காற்று, நாக்கு ஆகியன அர்த்தத்தையும் ஒலி வடிவத்தையும் கொடுக்கின்றன. நாக்கு அர்த்தமுள்ள சொல்லை வெளியேற்றுவதற்கான கருவியாகப் பயன்பத்தப்படுகிறது. புத்தியும் சித்தமும் செயற்பட்டு நரம்பு, தசை மண்டலத்தின் தொழிற்பாட்டினால் கை, கால்கள் இயங்குகின்றன. புத்தியும் சித்தமும் செயற்படாமல் கை, கால்களோ, பிற உறுப்புக்களோ இயங்க முடியொது. அது போலவே நாக்கும் தொழிற்படுகின்றன. கருவியாகிய நாக்கின் ஊடாக வன்சொற்கள், கொடிய சொற்களைக் கேட்ட ஒருவர் 'எலும்பில்லாத நாக்கினால் எப்படியெல்லாம் கதைக்கிறான்' எனக் நாக்கைக் குறை கூறுவார். அவர் அச்சொல் வெளிவருவதற்கு மூலகாரணமான அறிவு, மனம் ஆகிய இரண்டையும் கவனத்தில் கொள்ளாமல் நாவின்மீது பழியைப் போடுகின்றார். இவ்வாறுதான் நாக்குப் பலரின் வசைச் சொல்லைக் கேட்கிறது. 'எய்தவன் இருக்க



சோலையூர்க் குருபரன்

அம்பை நோகுவதுபோல்'

நாம், எங்கு, எவ்விடத்தில், எந்த நிலையில் இருந்தாலும் மனவடக்கம் பேணுவது அவசியமாகின்றத. 'மனமொரு குரங்கு மனித மனமொரு குரங்கு..' என்ற பாடலடியின்படி குரங்கு அங்குமிங்கும் தாவிச் செல்வது போல் நமது மனமும் கட்டுப்பாடு இல்லாமல் அலை மோதிக் கொண்டிருக்கும். அதனைக் கட்டுப்படுத்துவதற்கு நேர் சிந்தனைகள் உதவுகின்றன. நாம் கற்ற நூல்கள், பெற்ற போதனைகள், கற்ற கல்வி, பெரியோர், நல்லோர் கூட்டுறவு, சமய ஆன்மீக சிந்தனைகள் ஆகியன உதவுகின்றன.சினம், கோபம், அகங்காரம், பிடிவாதம் ஆகியன உணர்ச்சி மேலீட்டாலும், மனவெழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாததாலும். பதட்டம், பதகளிப்பு, நெருக்கீடு, எதிரான சிந்தனை ஆகியவற்றால் ஏற்படுகின்றன. இவற்றை அறிவு, மனம் ஆகியவற்றால் கட்டுப்படுத்த முடியாதபோது நமது மனதில் தோன்றிய எண்ணங்கள், கருத்துக்ககள் நாப்பிறழ்ந்து வன்சொற்களாக வாயினூடாக வெளியேறுகின்றன. இத்தகைய சொற்கள் பலரை வேதனை அடையச் செய்கின்றன. அவ்வேதனையினால் மனவருத்தம், முரண்பாடு, கோபம், பழிவாங்கல் வன்ம உறவு ஆகியன ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றன. அதனால்தான் பெரியோர்கள் மனவடக்கமும் நாவடக்கமும் முக்கியம் என்றனர்.

சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில் கோப்பெரும் தேவியாரின் ஒற்றைக்கால் சிலம்பு பழுதடைகிறது. அதனைத் திருத்துவதற்கு பொற்கொல்லனிடம் கொடுக்கின்றனர். பொற்கொல்லன் சிலம்பைத்திருடிக் களவு போய்விட்டதாகப் பொய் கூறுகின்றான். அதனால் பாண்டிய மன்னனுக்கும் கோப்பெருந்தேவியாருக்கும் இடையில் ஊடல் வருகின்றது. எப்படியாவது சிலம்பைக் கொடுத்து தேவியாரின் மனக் குறையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற கவலையோடு மன்னன் இருக்கிறான். இந்தச் சந்தர்ப்பத்தில் கோவலன் கண்ணகியின் ஒற்றைக்கால் சிலம்பை விற்பதற்காக பொற் கொல்லனிடம் செல்கின்றான். இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய பொற்கொல்லன் தேவியாரின் சிலம்பைத் திருடிய கள்வன் என் பட்டறையில் இருககிறான். அவன் திருடிய சிலம்பு இதோ இருக்கிறது எனக் கூறிப் பாண்டிய மன்னனிடம் சிலம்பைக் கொடுக்கிறான். பாண்டிய மன்னனும் காவலர்களை அழைத்துக் 'கள்வனைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்'என்பதற்குப் பதிலாகத் தேவியாருடனான ஊடல் மயக்கத்தில் இருந்த மன்னன் நாத் தடுமாறிக் 'கள்வனைப் பிடித்துக் கொன்று கொணர்க' எனத் நாத்தடுமாற்றத்தில் கூறிவிடுகிறான். கொண்டு என்பது கொன்று என மாறியதனால் கோவலன் கொல்லப்படுகிறான். கண்ணகி கோபம் பொங்கியெழ ஒற்றைச் சிலம்புடன் வந்து வழக்காடி வெல்கிறாள். பிழையான தீப்பை வழங்கிய குற்றத்தினால் மன்னன் அதிர்ச்சியில் இறக்கிறான். மன்னன் இறந்த அதிர்ச்சியில் கோப்பெருந் தேவியும் அவன் அருகில் விழுந்து இறந்து போகிறாள். கோபம் அடங்காத கண்ணகி மதுரையை எரித்து வெறியேறுகிறாள். மன்னன் மனத்தடுமாற்றத்தில் இருந்ததனால் ஒரு சொல் தடுமாறி மதுரை மாநகரமே எரிந்தது. அதனால் தான் திருவள்ளுவர் 'யாகவராயினும்நா காக்க' எனக் கூறினார் போலும்.

மனவெழுச்சிக்கு அறிவு கட்டுப்பட்டு கட்டமைக்கப்பட்ட சிந்தனை நாவுக்கூடாக வன்சொல்லாக வெளியேறுவதனால் நம்மை அறியாமலே பல வேளைகளில் நாம் நமது சுயநினைவை இழக்கிறோம். அதனால் பலர் வேதனை அடைகின்றனர். சிலர் பாதிக்கப்படுகின்றனர். இந்தப் பாதிப்பினால் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்கு மனக்கட்டுப்பாடும் நாவடக்கமும் அவசியமாகின்றன. இதனைக் கற்றறிந்தவர்கள் வாழ்க்கையில் கடைப் பிடித்து மற்றவரையும் வழிப்படுத்துவது சிறந்ததாகின்றது.

உடலுக்குள் நடைபெறும் அனைத்துச் செயற்பாடுகளும் தாமாகவே இச்சைவழிச் செயற்பாடாக நடந்து கொண்டிருக்கின்றன. அதேபொல் புத்தியும் மனமும் சேர்ந்து ஒரு விடயம் தொடர்பாக, ஒருவர் பற்றிய விடயம் ஒன்றைக் கட்டமைக்கின்றன. அந்தக் கட்டமைக்கப்பட்ட விடயம் ஒன்றே வாய் வழியாகச் சொல்லாக, ஒலியாக வெளிவருகின்றன. இரு நண்பர்கள் சந்திக்கிறார்கள் என வைத்துக் கொள்வோம். அவர்கள் இருவருமமுன்கூட்டிக்கட்டமைத்தருந்த எண்ண அலைகள் இருவர் மூலமாகவும் வெளிப்படும். அதன் பின்னர் உரையாடலுக்கான எண்ண அலைகள் அந்தக் கணங்களில் பதிவு செய்யப்பட்டு கேள்வி, பதில்களாக வெளிவரும். இந்த இடத்தில் கருத்து வெறிப்பாட்டுக்கான வெறும் கருவியாக மாத்திரமே நாக்குத் தொழிற்படுகின்றது. இரு புதியவர்கள் சந்திக்கும் போது அறிவு, மனம் இரண்டிலும் சிந்தனை அலைகள் கடடமைக்கப்பட்டுஅதே கணமே வினவுதல், பதிலை எதிர்பார்த்தல் என்றவாறு கட்டகைக்கப்பட்ட விடயங்கள் சொற்களாக வெளிவரும். இரு விரோதிகள் சந்தித்தால் அவர்கள் இருவரிடமும் அவர்கள் தொடர்பான முன்கூட்டியே மூளையிலும் மனதிலும் பதிவாகி இருந்த வன்ம உணர்விலான எண்ண அலைகள் கோபமாக வெளிப்படும். அதற்கேற்றவாறு சொற்கள் கட்டமைக்கப்பட்டிருக்கும். அந்த எண்ண அலைகளே வெகமாகச் சொற்களாக வெளிப்படும்.

ஒரு பேச்சாளர் பேசுகிறார் என வைத்துக் கொள்வோம். அவர் திட்டமிட்டு ஒழுங்கமைத்து வைத்திருந்த ஞாபகப் பதிவுகள் சரளமான பேச்சாக வெளிப்படும். பேசசாளர் ஒருவர் திட்டமிடாமல் உடனடியாகப் பேசுகிறார் என்றால் அதற்கேற்றால் போல் புத்தியும் சித்தமும் வேகமாகத் தொழிற்பட்டு அவர் இயல்பாக மொழியைப் பயன்படுத்தும் வடிவில் சரளமாக வேகமாகச் சொற்கள் வெளிவரும். இருவருக்கிடையில் முரண்பாடு ஏற்பட்ட பின்னர், புத்தியிலும் சித்தத்திலும் வன்ம உணர்வாகப் பதிவு செய்யப்பட்டு அது வெளிப்படுத்தப்படுவதற்கான சந்தர்ப்பத்தை எதிபார்த்துக் கொணடிருக்கும். அந்த வேளையில் இருவரும் சந்தித்தால், மூர்க்கத்தனம், வன்மம், பழிதீர்த்தல் ஆகியன கலந்த கலவையாக கோபம் வெளிப்படும். இருவருடைய வாக்குவாதத்திலும் பெரும்பாலும் கட்டமைக்கப்பட்ட வன்சொற்களே வெளிபட்டுக் கொண்டிருக்கும். இந்த வன்சொற்களுக்கும் நாக்குக்கும் தொடர்பில்லாமல் வெறும் கருவியாக மாத்திரமே நாக்குத் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும்.

குடும்பச் சண்டை ஒன்றில் கணவன் மனைவியரிடையே பேசத்தகாத கடுமையான வன்சொற்கள் வெளிவருகின்றன என வைத்துக் கொள்வோம். இருவரிடமும் நீண்டகாலமாக இருந்து வந்த நம்பிக்கை, அவநம்பிக்கை, கோபம்,சினம், விரோதம், வன்மம், பலம், பலவீனம், விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு, சமரசமின்மை, பிடிவாதம், எதிர்பார்க்கை நிறைவேறாமை, சுயபுத்தியின்மை, அனுசரிப்பின்மை என்பவற்றுக்கூடாக புத்தியும் சித்தமும் சேர்ந்து நீண்ட காலமாக உணர்வுப் பதிவுகளைக் கட்டி எழுப்பிருக்கும். இருவரிடமும் வாக்குவாதம் ஏற்படும்போது உணர்வுப் பதிவுகளில் இருந்த பெரும்பாலான சொற்களும் சேர்ந்து சகிக்க முடியாத வன்சொற்கள், கொடுஞ்சொற்களாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். இங்கு வாய், நாக்கு, பல், குரல்வளை, மேலண்ணம், கீழண்ணம், ஒலி பிறப்புக்கான காற்று ஆகியன சொல் வெளிப்பாட்டுக்கான கருவிகளாகத் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும். இதுதான் விஞ்ஞான ரீதியிலான உண்மையுமாகும். இச்சொற்கள் யாவும் மூளையில் பதிவு நெய்யப்பட்டிருக்கின்ற வடிவத்தில் அப்போதைய மன நிலைக்கும் மன எழுச்சி வேறுபாட்டுக்கும் எற்ப வெளிப்படும். இச்சொல் வெளிப்பாட்டில் பரிச்சயம் இல்லாத சொற்களும், புதிய சொற்களும் வெளிவாராது. கெட்ட வார்தைப் பிரயோகங்கள், கொடூரமான சொற்கள் அவருக்குப் பரிச்சயம் இல்லாதபோது அவரிடம் இருந்து வெளிப்படாது. நாம் நாளாந்தம் 80 வீதத்துக்கு மேலாகப் பரிச்சயமான சொற்களையே பேசிக் கொண்டிருக்கிறோம். மூளையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் சொற்களஞ்சயத்துக்கு ஏற்பவே சகல செயற்பாடுகளிலும் சொற்கள் வெளியேறிக் கொண்டிருக்கும்.

நாம் வாழும் வாழ்க்கை, நடத்தைக்கோலங்கள், பரம்பரை, வாழும் சூழல், பதவி, அலுவலகம், கொண்டுள்ள நட்புகள், உறவினர்கள், பெற்ற கல்வி, வாசிப்பு, ஊடகங்களைப் பயன்படுத்தல், அறிவுறுத்தல்கள், போதனைகள், ஆன்மீக சிந்தனைகள் ஆகிய பல நமது அறிவையும், சிந்தனைத் திறனையும், சொற்களஞ்சயத்தையும் தீர்மானிக்கின்றன. நாம் உருவாக்கிக் கொண்ட நல்மனப்பாங்கும், வாழ்க்கை முறையும் அதற்கேற்றவாறான சொற்களஞ்சியங்களையே உருவாக்கிக் கொண்டிருக்கும். அரசியல்வாதி, விஞ்ஞானி, வைத்தியர், மாலுமி, விமான ஓட்டி இவர்கள் போன்ற பலரை எடுத்து நோக்கினால் அவர்களின் மூளையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் சொற்களஞ்சியத்தில் பெரும்பாலானவை அவர்களின் தொழிலோடு சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். இவர்களின் உரையாடலின்போது பெரும்பாலும் இந்தச் சொற்களே நாவினூடாக வெப்பட்டுக் கொண்டிருக்கும். அதேபொல் சேரிக் குடிசைகளில் வாழ்வோர், நடைபாதை வியாபாரிகள், தொழிலாளர்கள், படிப்பறிவற்ற பாமர மக்கள் ஆகியோரிடம் இருந்து அவர்களின் நாளாந்த வாழ்கையில் பயன்படுத்துகின்ற சொற்களஞ்சயத்தக்கு ஏற்றவாறே அவர்கள் சொற்களைப் பயன்படுத்துவார்கள்.

சிந்தனை உருவாக்கம், சொற்பிறப்பு, அதன் கருத்துருவாக்கம், சொற்களஞ்சியம், அதன் வெளிப்பாடு தொடர்பான தெளிவினை ஓரளவு அறிந்திருப்பீர்கள். புத்தி, சித்தம் மூலமாக ஒருவரின் சிந்தனைத் திறன் கட்டமைக்கப்பட்டு கருத்துருவாக்கம் பெற்று நாவின் உச்சரிப்பினூடாக சொற்கள் வெளியேறுகின்றன. இதற்குக் காரணமான கருவியாக மாத்திரம் இருக்கையில் நாக்கு ஏன் இகழப்பட வேண்டும். இவ்வாறு இருக்கையில் பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் நாவடக்கம் பற்றிய குறளை எதற்காகப் வைத்தார்.

*யாகவராயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு*

இக்குறள் நாவடக்கம் இல்லாதவர் மற்றவர்களால் அவமானப்படுத்தப்படுவர் என்பதை உணர்த்துகிறது. புத்தியும் மனமும் செர்ந்த செயற்பாட்டுக்குக் கருவியாக நாக்குஇருக்கையில்நாவடக்கம் பற்றி ஏன் கூறினார். நாவடக்கத்தின் ஊடாக மனவடக்கம் பற்றிக் கூற விளைகின்றாரா என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

*இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்தலென்பது*
*இல்வாழ்வில் விதிக்கப்பட்டபடி வாழ்வதற்கே..*

வாழ்வாங்கு வாழ்தல் தொடரும்..

# சிங்கள தேசத்தின் சிந்தனை தமிழ் இனத்தை ஒழிக்கும் வேண்டும்
# தமிழ் கட்சிகள் புலம்பெயர் அமைப்புக்கள் ஒரு குடையின் கீழ் அணிதிரள வேண்டும்

**(கனகராசா சரவணன்)**

சிங்கள தேசத்தில் இருப்பவர்களுடைய மூளை எல்லாம் தமிழர்களை ஒழித்துகட்ட வேண்டும் என செயற்படுகின்றனர். எனவே தமிழ் இனத்துக்காக செயற்படுகின்ற கட்சிகள் புலம் பெயர்ந்த உறவுகளின்; அமைப்புக்கள் ஒன்றாக பலமாக இருக்க ஒரு குடையின் கீழ் அணிதிரளவேண்டும் இல்லை என்றால் மக்களையும் தேசத்தையம் காப்பாற்ற முடியாது என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நா. உறுப்பினருமான செல்வம் அடைக்கலநான் தெரிவித்தார்.

வெலிக்கடைச்சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்க தலைவர் குட்டிமணி, தங்கதுரை 40 வது ஆண்டு தமிழ் தேசிய வீரர்கள் தினத்தையிட்டு மட்டக்களப்பு ரெலோ காரியாலயத்தில் சனிக்கிழமை (29) இடம்பெற்ற நினைவேந்தலில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் தமிழ்கள் மீது 1957 ல் கலவரம் அதன் பின்பு 1978, 1983 தொடர்ச்சியான கலவரங்களை பார்த்தால் அவர்களுடைய மூளையிலே சிந்திக்கின்ற விடையம் தமிழர்களை ஒழித்துகட்டுவதே தவிர மாறாக பொருளாதாரத்தில் மிக மோசமான சூழலை சந்தித்திருக்கின்ற நாட்டை பொருளாதார ரீதியில் செப்பனிடுகின்ற செயற்பாடுகளில் கவனம் செலுத்தாது தமிழர்களை அழித்தொழிப்பதே அவர்களினது செயற்பாடாக உள்ளது

இப்போது பாடத்தால் மனித குரங்கு தன்னுடைய செயற்பாட்டில் தனது மார்பை தட்டுவது போல தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை அவர்கள் கொண்டாடுகின்ற அல்லது தமிழர்களுக்கு ஒன்றுமே கொடுக்க கூடாது என சிங்கள மக்களுக்கு தமிழர்கள் எதிரியாக காட்டுகின்ற ஒரு செயற்பாட்டை தான் இலங்கை அரசில் இருக்கின்ற சில தலைவர்கள் செய்கின்றனர்.

தொடர்ச்சியாக வரலாற்றை பார்த்தால் தமிழர்களை இல்லாது ஒழிக்கின்ற செயற்பாடுகள் தொடர்ந்து இருக்கின்றது இப்போது வடக்கு கிழக்கில் தமிழ்பேசும் மக்களின் பூர்வீக வரலாற்றை சிதைக்கின்ற திட்டமிட்ட செயற்பாடாக தொல்பொருள் இடத்தை கண்டுபிடித்தால் அதனை பாதுகாப்பது தன் அதன் கடமை அதைவிடுத்து அங்கு புத்த விகாரைகளை அமைத்து நில அபகரிப்புக்களை செய்கின்றனர்.

இவ்வாறு நாடு பொருளாதாரத்தில் வீழ்ந்திருக்கின்ற செயற்பாட்டை மறந்து அதனை சிந்திக்கது எங்களை நசுக்குகின்ற செயற்பாடுதான் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது என்பதுடன் வரலாறு அப்படிதான் செல்லுகின்றது எங்கள் தமிழ் இனத்தை ஒழிக்கவேண்டும் என செயற்படுகின்ற தலைவர்களாகதான் இன்று சிங்கள தேசத்தில் உருவாகிக் கொண்டிருக்கின்றனர்..

ஆகவே இதை நாங்கள் தொடர்ந்தும் பார்த்துக் கொள்ள முடியாது ஏன் என்றால் எங்களுக்குள் ஒற்றுமை இல்லை எங்களுக்குள்ளே வலுவான ஆயுத போராட்டத்திலே வாய்திறக்காதவர்கள் எல்லாம் இப்ப திறக்கின்றனர். சரத்வீரசேகர மிக மோசமாக கச்சிக்கின்றார்.

இந்த நாள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் நாள் இந்த இலங்கை இந்திய ஒப்பந்தம் எங்கள் போராட்டத்தின் உச்ச கட்டம் ஜே,ஆர். ஜெயவத்தனாவை அடிபணிய வைத்தது அதனால் 13 திருத்தசட்ட முறைமை வந்தது அதை கூட இப்போது சட்டத்திலே இருக்கின்ற ஒரு விடையத்தை நடைமுறைப்படுத்தாது அதை மீறுகின்ற செயலில்; அரசு இருக்கின்றது

இந்த அரசியல் சாசனத்தில் இருக்கின்ற சட்டத்தை சாதாரண குடிமகன் மீறுகின்ற போது




அவர்கள் சிறை செல்லுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றது எமது இளைஞர்கள் அப்படிதான் அரசில் சாசனத்தில் சொல்லப்படுகின்ற விடையங்களை மீறி செயற்படுகின்தால் சிறைவாசம் சென்றிருக்கின்றார்கள்

ஆனால் தலைவர்கள் இப்போது மீறுகின்றனர் ஜனாதிபதி நாடாளுமன்றில் பேசம் போது வெளியில் புத்த பிக்குகள் 13 திருத்த அரசசானத்தை எரிக்கின்றனர் அவர்களுக்கு சட்டம் நடவடிக்கைக்கு எடுக்கப்பட்டதா? இல்லை ஆனால் தமிழர்கள் ஒரு இனத்தின் சார்பாக போராடுகின்ற போது அவர்களை கைது செய்து நீதிமன்றில் நிறுத்தும் செயற்பாட்டை இங்கு இருக்கின்ற பொலிசார் மிக சாதுரியமாக செய்கின்றனர். அவர்களுடன் முப்படைகளும் எங்களுக்கு எதிரான நடவடிக்கையில் தான் இருக்கின்றனர்.;

இன்று நீர்குழாய்களுக்காக நிலத்தை தோண்டுகின்ற மற்றும் கட்டிடம் அமைக்க நிலத்தை தோன்றுகின்ற இடமெல்லாம் மனித எச்சங்களுடைய துவில்கள் இருந்து கொண்டிருக்கின்றது எங்களுடைய இனத்தை ஒழித்துகட்டுகின்ற செயற்பாட்டை செய்கின்ற இந்த அரசாங்கம் எப்படி எங்கள் இனப் பிரச்சனை தீர்விலே தன்னுடைய கடமையை செய்யும்.

அரசியல் சாசனத்தை மீறுகின்ற ஜனாதிபதி உட்பட ஏனையவர்கள் எப்படி இந்த அரசியல் சாசனத்தை முறையாக செய்யமுடியம் என்ற கேள்வியுள்ளது.

இந்தியாவிற்கு கடிதம் எழுதுவதில் எங்களுடைய கட்சிகள் மூன்று நான்கு பிரிவுகளாக கடிதங்களை கொடுத்தனர் இது மிகவும் அவமானப்படுகின்ற வெக்கி தலைகுனிகின்ற செயல் அதன் எதிரொலி ஜனாதிபதி சொன்னார் நீங்கள் ஒற்றுமையாக வந்தால் இன பிரச்சனையை தீர்க்கமுடியம் என்றார்.

எனவே நாங்கள் எல்லாம் இனத்தின் சார்பாக கட்சிகளை நடத்துகின்ற கட்சிகள் எங்களுடைய நிலம், எங்களுடைய இயக்கங்கள் முக்கியமாக போராடிய அந்தந்த இயக்க போராளிகளும் இந்த நிலத்தை மீட்பதற்காக உயிரிழந்தனர் பொதுமக்கள் உயிரிழந்தனர் அவர்கள் உயிரிழந்த அந்த இடங்களில் நின்று கொண்டு நாங்கள் என்ன சொல்லுகின்றோம் நிலம் பாதுகாக்கப்படவேண்டும் இன பிரச்சனை தீர்கப்படவேண்டும் ஆனால் அதை உதட்டலளில் சொல்லுகின்ற ஒரு வெக்கக்கேடான செயற்பாட்டை பார்க்கூடியதாக இருந்தது.

ஆகவே எங்கள் தலைவர்கள் கொல்லப்பட்ட இதே நாளிலே நான் ஒரு அறை கூவலை விடுகின்றேன் வெறும் வெட்டுப் பேச்சுக்களுக்கும் வெறும் உதட்டளவில் பேசுகின்ற சந்தர்பங்களை இனியும் பேசாதீர்கள் இன்று நாங்கள் ஒன்றாக இணைய வில்லை என்றால் ஒன்றாக பலமாக இருக்க வில்லை என்றால் எங்களுடைய தேசத்தையம் மக்களையும் காப்பாற்ற முடியாது வெறும் வெட்டுப் பேச்சு பேசுகின்றவர்களாகதான் கட்சிகள் இருப்போம்.

எனவே எங்களுக்குள் பல வேற்றுமைகள் இருந்தாலும் புலம் பெயர்ந்த தேசத்திலுள்ள மூன்று நான்கு பிரிவுகளாக இருக்கின்ற அவர்களும் ஒன்றினைய வேண்டும் அவர்களுடன் நாங்கள் ஒன்றினைய வேண்டும் ஒரு குடையின் கீழ் அணிதிரளவேண்டும் இல்லாவிடில் எங்கள் இனத்தை யாரும் காப்பாற்ற முடியாது.

ஆகவே தனிப்பட்ட கட்சி சின்னத்திலே தனிபட்ட கட்சிக்கு பின்னாலே கூட்டமைப்பு என கூறமுடியாது ஆகவே மக்களுடைய விடுதலை என்று கருதுபவர்கள் பொது சின்னத்தில் இனையவேண்டும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அதை தொடர்ந்து செய்யும் இனப்பிரச்சனைக்காக தீர்வு இந்த 13 வது திருத்த சட்டத்தினுடைய பொலிஸ் அதிகாரம் உட்பட அதிகாரங்களை கொடுக்கின்ற வாய்ப்பை உருவாக்கினனால் எங்கள் புலம்பெயர்ந்த உறவிகளின் முதலீடுகளை நாங்கள் கொண்டுவர முடியம் இந்த நாட்டை தூக்கி நிமிர்து;துகின்ற வாய்ப்பை உருவாக்க முடியம் எங்கள் கையில் பலம் இருக்கின்றது அதை பயன்படுத்த தவறுகின்றோம்.

அப்படி போராடி கிடைக்க வில்லை என்றால் வடக்கு கிழக்கை இந்தியாவுடன் இணைத்துக் கொள்ளுகின்ற சந்தர்பத்தை கோரலாம் அவ்வாறு கோருகின்ற போது எங்களுடைய சுதந்திரத்தை இறையான்மையை பாதுகாக்க முடியும்.

சிங்கள தேசம் படுகொலைகள் செய்கின்ற சிந்தனையுடன் இருக்கின்றனர் இரத்தத்தை குடிக்கின்ற சிந்தனையுடன் இருக்கின்றனர் அவர்களின் சிந்தனை ஒருபொதும் மாறாது என்பதை கடந்த கால வரலாறுகள் சொல்லுகின்றது எனவே அந்த விடையத்தில் இப்படியான முடிவை எடுத்தால் என்ன என்ற கேள்வியை மக்களிடம் விடுகின்றேன் என்றார்.

# கஸ்ட பிரதேச பாடசாலைக்கு உதவி வழங்கல்





**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினூடாக நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கஸ்ட பிரதேச பாடசாலையான கிறேட் வெஸ்டன் பாடசாலை மாணவர்களுக்கு கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்ட பந்துகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கஸ்ட பிரதேச பாடசாலையான கிறேட் வெஸ்டன் பாடசாலை கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் ஏனைய துறைகளில் மிக நீண்ட காலமாக சாதனை படைத்து வருகின்றது.

அந்த வகையில் அண்மையில் இப்பாடசாலை மாணவர்கள் வலய மட்டத்தில் நடைப்பெற்ற கரப்பந்தாட்ட போட்டிகளில் வெற்றி பெற்று மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளனர். இருந்தபோதிலும் அம்மாணவர்கள் பயிற்சி பெற ஒரு கரப்பந்தாட்ட பந்து ஒன்று இல்லாமையால் அயல் பாடசாலையொன்றில் பழைய கரப்பந்தாட்ட பந்து ஒன்றை இரவல் வாங்கியே அதில் பயிற்சி பெற்று வந்துள்ளனர்.

இந்நிலையில் தலவாக்கலை பிரதேச பிராந்திய ஊடகவியலாளரும் அப்பாடசாலையின் ஆங்கில ஆசிரியருமான பி.கேதீஸ் அவர்களின் முயற்சியால் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினூடாக இந்த பாடசாலை மாணவர்களுக்கு கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்ட பந்துகள் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்பட்டன. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம் பாரிஸ்,இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் பொருளாளரும் சூரியன் எப்.எம் வானொலியின் விரிவாக்கல் பிரிவின் முன்னாள் முகாமையாளருமான அஜித்குமார், இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் இணைப்பார் ஏகாம்பரம்,இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் அட்டன் பிரதேச அமைப்பாளர் ரஜினிகாந்த் ஆகயோர் கலந்துக்கொண்டனர்.

# மாபெரும் நடமாடும் சேவை





அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக கிழக்கு மாகாண ஆளுனரின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகத்தின் ( பட்டிபளை ) ஏற்பாட்டில் 2023.07.29 திகதி ( சனிக்கிழமை ) அம்பிலாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தில் மாபெரும் நடமாடும் சேவை நடைபெற்றது.

இதன் போது பதிவாளர் கிளையின் சேவைகள் , அடையாள அட்டை வழங்கும் சேவைகள் , காணி தொடர்பான சேவைகள் , சமூர்த்தி மற்றும் கிராம சேவகர் தொடர்பான சேவைகள் , ஆயுள்வேத மருத்துவம் , ஏனைய மருத்துவ சேவைகள் என்பன பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

இச்சேவையின் மூலமாக பல பொது மக்கள் நன்மை அடைந்தார்கள்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி. மேனகா புவிகுமார் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி , வைத்தியர்கள் ஏனைய திணைக்களகங்களின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# குற்றச் செயல்களை கட்டுப் படுத்துதற்காக பொலிஸாருக்கும் சிவில் பாதுகாப்புக் குழுக்களுடனான விடே கலந்துரையாடல்





**(எம்.ஏ.றமீஸ்)**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் செயற்பட்டு வரும் சிவில் பாதுகாப்புக் குழு பிரதிநிதிகளுடனான விஷேட கலந்துரையாடல் நிகழ்வு (30) அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில்பொறுப்பதிகாரி டபள்யூ.எஸ்.ஏ.சதாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது பொலிஸ் உயரதிகாரிகள், சர்வமத தலைவர்கள், சிவில் பாதுகாப்பு குழு பிரதிநிதிகள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவின் அதிகார எல்லைக்கு உட்பட்ட அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை மற்றும் ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் உள்ள அனைத்து இன மக்கள் மத்தியிலும் ஒற்றுமையினைக் கட்டியெழுப்பி நிரந்தர சமாதானத்தினை நிலைநாட்டுவதன் அவசியம் குறித்து விஷேட வேலைத் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டியமை குறித்து சுட்டிக் காட்டப்பட்டது.

இதுதவிர, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள சுமார் ஒரு இலட்சத்து 28 ஆயிரம் பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸாரும் பொதுமக்களும் இணைத்து செயற்பட வேண்டிய விதம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனையினை மக்கள் மத்தியிலிருந்து இல்லாதொழிப்பது தொடர்பிலும், குற்றச் செயல்களை கட்டுப் படுத்துவதற்கான விஷேட நடைமுறைகள் குறித்தும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் நிகழும் பெண்கள், சிறுவர்கள் தொடர்பான குற்றச் செயல்கள், களவு கொள்ளைச் சம்பவங்கள், வீட்டு வன்முறைகள் அநீதிகள், இரவு வேளைகளில் தேவையற்ற வகையில் நடமாடும் நபர்கள் தொடர்பான விடயங்கள், குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நடைமுறைகள் போன்றன தொர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இவ்வாறான விடயங்களில் இனிவரும் காலங்களில் சிவில் பாதுகாப்புக் குழுவினரும் பொலிஸாரும் இணைந்து செயற்பட வேண்டிய விதம் குறித்தும் சுட்டிக் காட்டப்பட்டது.

வீதி விபத்துக்கள், டெங்கு நோய் தாக்கம் போன்றவற்றால் நாளாந்தம் பல்வேறான உயிரிழப்புக்கள் மக்கள் மத்தியில் ஏற்படுகின்றன. இவற்றைக் கட்டுப் படுத்துவற்கு மக்கள் அனைவரும் முன்வர வேண்டியதன் அவசியம் குறித்தும் அனைத்து இனத்தவர்கள் மத்தியிலும் பரஸ்பர ஒற்றுமையினை வளர்க்கும் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவற்கான வேலைத் திட்டங்கள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் யாப்பின் பிரகாரம் மதத் சுதந்திரத்தைப் பின்பற்றி நாங்கள் ஆராதிப்போம்

## மிஸ்பா ஜெப மினரியின் தலைமை சுவிசேகர் சகோ ஜெயம் சாரங்கபாணி

(சுமன்)

எதிர்காலத்தில் மதத்தின் மூலமாக ஒரு குழப்பம் ஏற்படுத்தப்படாமல் புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள், ஆன்மீகத் தலைவர்கள் சமாதானமாக இதனை வழிநடத்த வேண்டும். அரசியல் யாப்பின் பிரகாரம் மதத் சுதந்திரத்தைப் பின்பற்றி நாங்கள் ஆராதிப்போம் என்று மிஸ்பா ஜெப மிஷனரியின் தலைமை சுவிசேஷகர் சகோ.ஜெயம் சாரங்கபாணி தெரிவித்தார்.

(30) மட்டக்களப்பிலுள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

ஆன்மீகம் ஒன்றே மனிதனை பிரிவினை இல்லாதபடிக்கு பலனைக் கொடுப்பது. இறைவன் எம் மீது அன்பாய் இருப்பது போன்று நாம் பிறரின் மீதும் அன்பாய் இருக்க வேண்டும். இந்த நாட்டுக்கு அன்பு தேவை. கடவுளினுடைய அன்பு வருமாயும் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்வோம். இந்த நாட்டில் பிரிவினை வராது. இலங்கை என்ற ஒரு கொடிக்கு கீழ் அனைவரும் வந்து இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். வீழ்ந்து போன இலங்கையை பிரார்த்தனையின் மூலமாகக் கட்டியெழுப்ப வேண்டும்.

நான்கு இன மக்கள் மூன்று பாசை பேசுகின்றோம். சிங்கள மக்கள் இந்த இலங்கையை அவர்கள் ஆள வேண்டும் என்று விரும்பகின்றார்கள். அவர்களுடன் நாம் ஒன்றிணைந்து கடவுளின் பிள்ளைகளாக சமாதனத்துடன் எங்கள் பிரதேசங்களில் நாங்கள் அதிகாரத்துடன் வாழ பிரார்த்தனை செய்கின்றோம். இஸ்லாமிய மக்களும் எம் சகோதரர்களே. அனைவரும் சகோதரர்களாக இருந்தால் இலங்கை கட்டியெழுப்பப்டும்.




இந்த மட்டக்களப்பு மாவட்டத்திலே மூவின மக்களும் பிட்டும் தேங்காய்ப் பூவையும் போல இணைந்து வாழ்கின்றார்கள். நாங்கள் பிரிந்து வழ விரும்பவில்லை. இதற்காகவே இறைவனுடைய தூதை நாங்கள் கொண்டு வருகின்றோம். இறைவல்லமையுடன் இந்த தேசம் கட்டப்பட வேண்டும். விசேடமாக மட்டக்களப்பை கடவுள் ஆசீர்வதிக்க இருக்கின்றார். நிச்சயம் கிழக்கு மாகாணம் கடவுளின் ஆசீர்வாதத்திற்கு உட்பட்டே ஆகும். தென்னிலங்கையும், வடபகுதியும் இறைவன் பக்கம் முழுமையாகத் திரும்ப வேண்டும். எங்கள் மூலம் கடவுள் இந்த இலங்கை முழுவதும் சமாதானத் தூதை விதைக்கின்றார்.

நாங்கள் இஸ்லாமியர்களை நம்புகின்றோம். இஸ்லாமியர்களும் எங்களை நம்ப வேண்டும். பிரிந்து செயற்படக்கூடாது. அதே போன்று சிங்கள மக்களும் எங்களோடு சேர்ந்து வேலை செய்ய வேண்டும்.

விசேடமாக இந்த நாட்டிலே ஊடகவியலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். எத்தனையோ பேர் கைது செய்யப்பட்டும் கொலை செய்யப்பட்டும் இருக்கின்றார்கள். எத்தனையோ பேர் காணாமல் ஆக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பைக் கொடுக்க வேண்டும் என்று இறைவன் செல்லுகின்றார். ஊடகவியலாளர்களுக்காகவும் நாங்கள் பிரார்த்தனையிலே ஈடுபடுவோம்.

பிரார்த்தனையின் மூலம் அனைத்த இனங்களையும் ஒரே இடத்திற்குக் கொண்டு வர வேண்டும். நதியானது இறுதியில் சமுத்திரத்தை அடைந்தே ஆக வேண்டும். கிழக்கு வடக்கு தெற்கு என்றில்லாமல் ஒரே சமுத்திரத்தில் நாம் சேர்வதாக இறைவன் ஒவ்வொருவரையும் தேவசாயலாகப் படைத்திருக்கிறார். அதற்கான இறைத்தூதை நாங்கள் கொண்டு செல்கின்றோம் அவ்வளவுதான்.

நாங்கள் இறைத்தூதோடு சேர்ந்து சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றோம். இதனை நாங்கள் 42 வருடங்களாக மேற்கொண்டு வருகின்றோம். தற்போது எமது பணிகள் வாகரையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அடுத்த வருடங்களில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியாவில் முன்னெடுக்க இருக்கின்றோம்.

எங்களது சமூகசேவையை நாங்கள் கிளிநொச்சி, முள்ளியவளை, பலாங்கொடை, நாவலப்பிட்டி போன்ற பிரதேசங்களில் மேற்கொண்டுள்ளோம். விசேடமாக யுத்தத்தினால் பாதிப்புற்ற பகுதிகளில் முன்பள்ளிச் சிறார்களுக்கான இலவச கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். கணவனை இழந்த பெண்களுக்கான தையல் பயிற்சிகள் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். வருமானம் குறைந்த கும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் 400 பேரைத் தெரிவு செய்து அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் உணவு வழங்கி வருகின்றோம். அத்துடன் 25 குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளைத் தெரிவு செய்து அவர்களது உயர்தரம் வரையான கல்விச்செலவுகளை நாங்கள பொறுப்பெடுத்திருக்கின்றோம். கற்பினித் தாய்மாருக்கான போசாக்கு வழங்கும் செயற்திட்டங்களையும் மேற்கொண்டுள்ளோம். அதே பொன்று கைவிடப்பட்ட உறவுகளுக்கும் எம்மால் ஆன உணவு உதவிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

சமயத் தொண்டர்கள், புத்திஜீவிகள் அரசியலை நாடக் கூடாது. அரசியல் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றது. ஆன்மீகம் இறைவனால் தெரிவு செய்யப்படுகின்றது. அரசியலுக்குரியவர்கள் இந்த 13வது திருத்தம் தொடர்பில் மக்களுக்கான விடயங்களை ஆராய்ந்து செயற்படுத்துவார்கள். நாங்கள் எங்களது பிரார்த்தனை மூலமாக மக்களுக்கான நியாயமான விடயங்கள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்போம். எங்களது பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு சம்மந்தன் வந்திருக்;கின்றார். அதேபோன்று தற்போதைய ஜனாதிபதி அன்று பிரதமராக இருக்கும்போது வந்திருக்கின்றார். தற்போது ஜனாதிபதி செயலகத்தில் இருந்து எங்களுக்கு ஒரு அழைப்பு வந்திருக்கின்றது. இங்கு 13 என்பதற்குள் தமிழர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கு உகந்ததான விடங்கள் வரவேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனை.

நடந்தவை முடிந்துவிட்டது. அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். இயேசு கிறிஸ்து அதிகாரங்களை தன் சீடர்களுக்கப் பகிர்ந்து கொடுத்தார். பகிர்ந்து கொடுக்கப்படும் போது அதனைக் கொடுப்பவரும் தன்னைப் பாதுகாக்க வேண்டும். பெற்றுக் கொள்பவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். எங்களுக்கு ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான அழைப்பு நேரடியாகக் கிடைக்கவில்லை. பத்திரிகை நண்பரூடாகவே தொடர்பு கிடைத்துள்ளது. அவ்வாறு நாங்கள் ஜனாதிபதியைச் சந்திக்கும் போது நிச்சயமாக 13வது திருத்தம் தொடர்பிலான எங்கள் நிலைப்பாடடையும் ஆன்மீக ரீதியில் வெளிப்படுத்துவோம். அதற்கு முதலில் நாங்கள் 13வது திருத்தம் தொடர்பில் ஒரு தெளிவினைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

இந்த நாட்டில் இனங்களுக்கடையிலான பிரச்சனைகள் தற்போது நிறைவடைந்துள்ளது. எதிர்காலத்தில் மதத்தின் மூலமாக ஒரு குழப்பம் ஏற்படுத்தப்படாமல் புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள், ஆன்மீகத் தலைவர்கள் சமாதானமாக இதனை வழிநடத்த வேண்டும். அரசியல் யாப்பின் பிரகாரம் மதத் சுதந்திரத்தைப் பின்பற்றி நாங்கள் ஆராதிப்போம்.

# இணைந்த வடக்கு கிழக்கில் மீளப் பெற முடியாத சமஸ்டி தீர்வே தேவை!

## மல்வத்தையில் மக்கள் ஒன்றுகூடி மக்கள் பிரகடனம் வெளியீடு.






( வி.ரி.சகாதேவராஜா)

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மீளப் பெற முடியாததும் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு தீர்வினை வழங்க வேண்டும் எனும் மக்கள் பிரகடனம் நேற்று (31) திங்கட்கிழமை மல்வத்தையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் நேற்று மக்கள் ஒன்றுகூடி மல்வத்தை சித்தி விநாயகர் ஆலயமருகில் வைத்து அச்சிடப்பட்ட மக்கள் பிரகடனத்தை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்தனர்.

மக்கள் வரிசையில் நின்று 13 ஆவது திருத்தம் மற்றும் சமஸ்டி தொடர்பிலான பல பதாகைகளை தாங்கிய வண்ணம் குரல் எழுப்பினர்.

‘கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான தீர்வினை நோக்கிய 100 நாள் செயற்பாட்டு திட்டத்தின் இறுதிநாளில் வெளியிடப்பட்ட மக்கள் பிரகடனம் வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் நேற்று அதன் ஒருவருட நிறைவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்மூலம் தமிழ்பேசும் மக்கள் உட்பட வடக்குக்கிழக்கில் வாழும் மக்கள் கௌரவமாக வாழ வழி சமைக்கும் ''எனவும் இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தெரிவித்தார்.

அத்தோடு இந் நிகழ்வில் அம்பாரைமாவட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் சமூக நலன்விரும்பிகள் பெண்கள் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்கள் யுவதிகள் 500 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளையும் முன்வைத்தனர் .

# இலவசமாக 7000 மாணவர்களுக்கு அப்பியாச கோப்பிகள் வழங்கி வைப்பு





(தலவாக்கலை பி.கேதீஸ்)

பெரண்டினா நிறுவனத்தினூடாக நுவரெலியா மாவட்டத்தில் 7000 பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் (31) நேற்று வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு நுவரெலியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் அதிதிகளாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, நுவரெலியா வலய கல்விப் பணிபபாளர் லசந்த அபேரட்ண, பெரண்டினா நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் பி.சிவகாந்த் , அதிபர்கள்,ஆசிரியர்கள் உட்பட மாணவர்களும் கலந்துக் கொண்டனர்.

# நாளை உகந்தை மலை முருகன் ஆலய ஆடிவேல் விழா தீர்த்தோற்சவம்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா தீர்த்தோற்சவம் நாளை 02ஆம் திகதி புதன்கிழமை சமுத்திரத்தில் நடைபெறவுள்ளது.

ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றுவந்தது.

ஆலய பரிபாலன சபை வண்ணக்கர் டி.எம்.சுதுநிலமே திசாநாயக்க தெரிவிக்கையில்; வழக்கம்போல அன்னதானம் மற்றும் பஸ் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம்முறை கதிர்காமம் உற்சவம் முன்கூட்டியே நிறைவடைந்திருப்பதால் உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் விழா மிகவும் சிறப்பாக இருக்கும் என்றார்.

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விசேட ரயில் சேவையை முன்னெடுக்கக் கோரிக்கை

(த.சுபேசன்)

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத்திற்கு விசேட ரயில் சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் -போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக போக்குவரத்து அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்;

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் ஆகஸ்ட் 20ம் திகதி தொடக்கம் செப்டம்பர் 16ஆம் திகதி வரை 25தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதற்கு நாடு பூராகவும், வெளிநாடுகளிலும் பக்தர்கள் உள்ள நிலையில் பக்தர்களின் வருகையை இலகுபடுத்தும் முகமாக மகோற்சவ காலத்தில் யாழ்ப்பாணத்துக்கான விசேட ரயில் சேவைகளை முன்னெடுப்பது அவசியமாக உள்ளது.

மஹோற்சவ காலங்களில் தற்போது செயற்பாட்டில் உள்ள புகையிரத ஆசனங்கள் அனைத்தும் முன்பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலை காணப்படுகிறது. எனவே முன்பதிவு செய்யாதவர்களும் ஆலயத்திற்கு வருகை தந்து தமது நேர்த்திக்கடனை நிறைவேற்ற கூடுதலான புகையிரத சேவை அவசியமாக உள்ளது.

இதனூடாக வெளி மாவட்டவர்கள், புலம்பெயர் தேசத்தவர்கள் இலகுவாக பாதுகாப்பான மார்க்கம் ஊடாக யாழ்ப்பாணம் வந்தடைய முடியும்.

கூடுதலான ரயில் சேவைகளை ஈடுபடுத்துவதன் ஊடாக யாழ்ப்பாணத்துக்கான சுற்றுலா துறையையும் ஊக்குவிக்க முடியும் என மேலும் அவர் தனது கோரிக்கை கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

# அம்பாறை வயல் நிலங்களில் மீண்டும் கிலுகிலுப்பான்

( அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் விவசாய விரிவாக்கல் பிரிவு மற்றும் சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட பயிர் செய்யப்பட்டு தற்போது அறுவடைக்கு தயாராகவுள்ள வயல் நிலங்களில் ‘கிலுகிலுப்பான் ’ எனும் பண்டிச் சம்பா இனம் மிகையாக வளர்ச்சியடைந்து பிரதான பயிர்களுக்கு சூரிய ஒளி செல்லுவதை தவிர்த்து , அதற்குரிய பசளைகளையும் உறிஞ்சி கதிர் பறிவதை குறைத்தும் வருகின்றது.

இதனால் விவசாயிகளின் இப் போக விளைச்சல் குறையலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட விவசாய உயர் அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி இந்த பண்டிச் சம்பா நெல் இனத்தை அடியோடு இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச விவசாயிகள் கேட்டுள்ளனர்.